


மிஸ்டர் ஜெட்!
லயன் காமிக்ஸ்
51
ரூ. 2-50


மிஸ்டர்
அதே இலண்டன்தான்! அங்கே
பார்த்தீங்களா- ஹோவர் பஸ்ஸுக்
காக க்யூவில் காத்துக் கொண்டி-
ருக்கிறார்கள்! இடைக் காலத்தில்
ஏற்பட்டிருக்கிற விஞ்ஞான முன்
னேற்றம் கொஞ்ச நஞ்சமல்ல-
ஆனால், மாநகரும் மனிதன் மட்-
டும் மாறவேயில்லை! அதே கபட
சிந்தனை, சுயநலப் போக்கு,
மோசம், கொள்ளை, திருட்டு-


அட சைத்தானே-
இ.. இது ரோபோ!
யெஸ்! என் பெயர் ஜெட்-
ஸ்காட்லாண்யார்டைச்
சேர்ந்த உளவாளி!
12½ வயது சிறுவன் ஹார்டியன்
மோயலே கடத்தி வந்த குற்றத்திற்-
காக உங்களே இப்போது அரெஸ்ட்
செய்கிறேன்!



ஸ்ஸ்ஸ்!
தோட்டாக்கள் என்னை துளைக்க முடியாது என்று அந்த மரமண்டைகளுக்குத் தெரியாது போலும்! பதிலுக்கு, இரட்டை விரலைக் காண்பித்தேன் ,பயல்களுக்கு!


டொங்க்
டங்க்
ஆ...!
அஹ்!



இப்போதைக்கு அவர்களிருவரும் எழுந்திருக்கப் போவதில்லை. அறையை முழுவதுமாக என் எக்ஸ்ரே கண்களால் ஆராய்ந்தேன்-



டம்! டம்!
ஹெய்! என்னப்பா? எனக்கு மட்டும் சான்ஸ் கிடையாதா?


தாழிடப்பட்டுள்ள கதவின் பின்னல் மோயல் இருப்பது தெரிந்தது. ஆனால், ஏகப்பட்ட பிளாஸ்டிக் வெடிகளை அவனுடைய உடம்போடு பிணைத்திருந்தார்கள்-
என்ன சப்தம் வெளியே-யாரங்கே?



ஸ்காட்லாண்ட் உளவாளி-ஜெட்! பையனை விடுவித்து விட்டு, சமர்த்தாகக் கைகளை தூக்கிக் கொண்டு வெளியே வாருங்கள்!
தொலைந்துபோடா! உள்ளே வர யத்தனித்தால் 'ப்ளைல்' தான்!
புகுந்து மென்னியை முறிக்க அவகாசம் போதாதுதான்!
நிதானமாக செயல் பட வேண்டிய தருணம் இது-ம்ம்-
க்ளிக்!


ஹை- ஜெட்! என்ன விவகாரம் சொல்!
ஒரு நெருக்கடி! ஸ்பைடர் உன்னோட 'ஹெல்ப்' தேவை!


யார் கண்ணிலும் படாமல் உள்ளே போய் வெடிகுண்டு களின் திரியை துண்டித்து விடு பயலே! அவர்களுடைய கவனத்தை இசைதிருப்ப நான் ஏதாவது பேச்சுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்!
ஜமாய்த்து விடுகிறேன்- ஜெட்!


டிங்! டிங்!


ஹலோ கடத்தல் பேர்வழிகளே-
நாம் ஒரு ஒப்பந்தத்துக்கு
வருவோமே!
எங்கேயாவது
போய்
முட்டிக்கோ!





என்னை விடாது பின் தொடர்ந்து வந்து குறிப்பெடுக்கிற குள்ளமான ஆசாமி தான் என்னைப் படைத்த பிரம்மா- டாக்டர் ஸ்வார்ட்ஸ்! என் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறார்-
இலண்டன் எனது சொந்த ஊர்- தம்பி அதனால்- அது சொர்க்கமாக தோணுது, எனக்கு!
ஹலோ புரபஸர்- தேறுவேனா?
குட்- வெரிகுட்! பாட்டு கூட நல்லா பாடுகிறாயே?
12



பாடுவதற்கென்ன?
தொடர்ந்து பாடலானேன்.


மரியாதையாக இங்கிருந்து ஓடிப் போ- இல்லேயேல வெடி வெடிக்கும், பயல் நொந்துக் கரியாகிப் போவான்!
சிலந்தி காரியத்தை முடிக்கும் வரை பயல்களின் கவனத்தை திசைதிருப்ப இப்படிக் காட்டுக் கூச்சல் போட வேண்டியிருக்கு! எல்லாம் தலை எழுத்துடா சாமி!





ஸ்பைடர்-ஜெட்டுக்கு! வெடிகள் துண்டிக்கப் பட்டு விட்டன. இனி உன் வேலையைக் காட்டு ராஜா!



றுகணம்- கதவை பிளந்து உள்ளிருப்-
வர்களுக்கு தரிசனம் தந்தேன்...
போலீஸ் அல்ல-
ஒரு ரோபோ!
பொடியனை
தகர்த்துத்
தள்ளு!
?
அஹ்!
முழிக்கிறான்
பார்!


ஊஹூம்- இதெல்லாம் என்னிடம் செல்லுபடி ஆகாது அப்பனே!
அடச்சே! தோட்டாக்கள் அவன் மீது பட்டு சிதறி தெறிக்கின்றது!


-அடேய் வெளவால் பையா-
பொறுத்தது போதும்-
பொங்கி எழு!
இதோ- பறக்கும்
படை கிளம்பி
விட்டது பாஸ்!



அதோ- எதிரி! விடாதே- தாக்கு!
பறக்கும் படை எழுப்பிய சத்தம் காயலான் கடை சரக்கை நினைவூட்டினாலும் காரியத்தில் சோடை போகவில்லை-
தாள் கிளப்பியாச்


படையும் வெளிக்
கிளம்பியது-
என்று கொஞ்ச
நஞ்ச நப்பாசை இருந்தால், என்-
னைக் கண்டதும் அது நசித்துப்
போக வேண்டும்!


டா-டா-டய்ங்! இதோ-
குண்டுகள் வீசப்படுகின்றன!
சந்தேகத்திற்குரிய நபர்களை அடையாளமிடப் பயன்-
படும் மசி- பறக்கும் படையின் கையில் இருக்கையில்
பயங்கர ஆயுதமாகிவிடுகின்றது-


உன் தகரடப்பாக்களையெல்லாம் ஒதுங்கி இருக்கச் செல். இல்லையேல், பயலுக்கு நெற்றிக்கண் வைத்து விடுவேன் ஜாக்கிரதை!
இவனை வழிக்குக் கொண்டு வர நாளாயிற்று!



ஆ ஐயோ!
எ-என் மூ-மூக்கு போ-போச்சு!
ஆ ஆ ஆ!


விடுபட்டால் போதும் என்று வெறியோடு பின்னாக்குத் துள்ளியவன், ஜன்னல் கண்ணாடியை உடைத்துக் கொண்டு வெளியே சரிந்தான்-ஆங்-ஒன்று சொல்ல மறந்து விட்டேனே-நாங்கள் அப்போது இருந்தது 50வது மாடியில்!
ஆ-ஐயோ-செத்தேன்!
அதிர்ஷ்டவசமாக ஸ்பைடருக்குக் கொள்ளை ஆசை எப்படியாவது செய்தித் தாளில் தலைப்பு செய்தியில் இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று-


ஜெட்டிடமிருந்து சிலந்திக்கு-
அவனை மேலே கொண்டு வாடா பயலே!
முயன்று கொண்டிருக் கிறேன்-மாஸ்டர்!



அப்படித் தான்!


நல்லாப் பிடிச்சுக்கோடா பயலே! உன்னே முழுசாக பாஸிடம் ஒப்படைக்கணும்!


அடக்
கண்றாவியே!
ஆ ஆ!


முறைக்காதீங்க பாஸ்-இப்படியாகும் என்று நான் கண்டேனு?
தொலேகிருன்-விடு! மேலே ஏறி வா!
என்னுடைய முதல் கேஸ் இவ்வாருக முற்றுப் பெற்றது. எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெற நினைத்தால் அது பேராசை-உக்கும்!


ஒ.கே. பேட்ஸ், மேட் மெக், ஸ்பைடர்- கேஸ் குளோஸ்! மேலே வாங்க!
அவரவர் கேபினுக்கு போய் ஓய்வெடுங்கள்! சமர்த்தாக!


LÙ!
BÙ!
BÙ!



டம்! டம்!
ஹேய்! என்னப்பா? எனக்கு மட்டும் சான்ஸ் கிடையாதா?


உனக்கும் ஒரு வாய்ப்பு கிட்டும்-அதுவரை பொறு மையாக இருடா-குள்ளா!
புட்! பட்!


12½ வயது சிறுவன்
மோயல் நீதானே?
யெஸ்! யிப்பீ- ரோபோ-
போலீஸ்! பெண்டாஸ்டிக்!
ஃபெண்டாஸ்டிக்
என் பெயர்! ஜெட்-
மிஸ்டர் ஜெட்!


இந்த ரோபோ- துப்பறியும் ஜெட்! ஒரு எலக்ட்ரானிக் சாதனை- உளவுத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கம்!
எக்ஸ்-ரே பார்வை கண்டுபிடிப்புகளை உடனடியாக அச்சிட்டு வழங்கும் அமைப்பு- நினைவாற்றல், தர்க்கவாதம், முகாந்திரம் போன்றவைகளுக்கு தனித்தனி சர்க்யூட்டுகள்- பல்வேறு நுட்பத்திறன் கொண்ட ஆயுதங்கள்- இவை தவிர, வெவ்வேறு சிறப்பாற்றல் படைத்த நான்கு தானியங்கி மினி துணை சாதனங்கள்-



இந்த ரோபோ- துப்பறியும் ஜெட்! ஒரு எலக்ட்ரானிக் சாதனை- உளவுத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கம்!
எக்ஸ்-ரே பார்வை கண்டுபிடிப்புகளை உடனடியாக அச்சிட்டு வழங்கும் அமைப்பு- நினைவாற்றல், தர்க்கவாதம், முகாந்திரம் போன்றவைகளுக்கு தனித்தனி சர்க்யூட்டுகள்- பல்வேறு நுட்பத்திறன் கொண்ட ஆயுதங்கள்- இவை தவிர, வெவ்வேறு சிறப்பாற்றல் படைத்த நான்கு தானியங்கி மினி துணை சாதனங்கள்-








ல-2.


யங்கர வலி ஏற்படுத்தும் ரப்பர்
தோட்டாக்கள் ஏராளம் கைவசம்!
அதோ எதிரி- 45 டிகிரி
சரிவில் பாயட்டும்!
ஒன்-டூ-த்ரீ-டட்-டட்-
இதோ
வெளவால்
முட்டை!
அழிக்க முடியாத
அடையாள மசி-குண்டு
வேறு!
சளார்!


ஆனல் வெள்ளோட்ட
வாய்ப்பு கூட கிட்ட-
வில்லே இன்னும்!
ஜெட் நுழைய முடியாத இடங்
களில் கூட புகுந்து நைவரிலை-
யை காட்டும் ஸ்பைடர். அதிலி
ருந்து வெளிப்படும் நுண்ணிய
நூலிழை ஒரு டன் எடையைக்
கூட தாங்கும் சக்தி
கொண்டது!
மாட்-மெக் பீரங்கி தாக்குதலுக்கு
வெடிகுண்டு மட்டுமின்றி வாயு
குண்டுகளேயும வீசும்!
முஷ் ஷும்!
இதோ
பாருங்களேன்!


இந்தா- மயக்க
டும்மீல்!


உன் திறமைகளை வெளிப்-
படுத்தியது போதும் ஜெட்!
ஓ.கே. பசங்களா- அவரவர்
கேபிறுக்குள் போங்கள்!
வெஸ் பாஸ்!
என்னப்பா ஜெட்! ஆட்டம் குடு பிடிக் கும்போது பசமாக்கி விட்டாயே!




கள சோதனையில் பிரமாத மாகத்தேறிவிட்டாய் ஜெட் இப்போது, நிஜ கேஸ் ஒன்றில் ஈடுபடப் போகிறாய்!
Y. Y. டிவிஷன் என்பது மிகத் தீவிர குற்றவியல் உளவுப் பிரிவு என்று என கம்ப்யூட்டர் மூளை-யில் குறிப்பிடப்பட்டுள்ளது!
ஹலோ- சார்! கேஸ் என்ன வென்று சொல்லுங்கள் வெளுத்துக் கட்டுகிறேன!






ஒரு காவல்துறை உயர் அதிகாரி இப்படித்தான் தொள தொளா என்று கை குலுக்குவதா? நேர பிடி உறுதியாக இருக்க வேண்டும்!
மறுபடியும் முயற்சிப்போமா?
ஐயோ - வேண்டாமே!



இந்த ரோபோ சரிப்பட்டு வருமா என்று இன்னமும் எனக்கு சந்தேகமாகவே இருக்கிறது ஸார்! உளவுத் தொழிலுக்கு விவேகம், அனுசரித்துப் போகும் தன்மை ஆகியவை அவசியத் தேவைகள். ஆனால் இந்த ரோபோவிடம் ரௌடித் தனம் மட்டும தான் இருக்கிறது!
அனுசரித்துப் போகும் தன்மையா? போலீஸ் வேலைக்கு ஆள் தேடுகிறீர்களா? அல்லது நர்ஸ் வேலைக்கா?
குற்றவாளியை நான் கண்டுகொண்டதும் என் அடுத்த ஒரே குறிக்கோள் அவன் மீது பாய்வது! குறுக்கே யார் வந்தாலும் க்ளோஸ்!
என் பாணி அதுதான்! அது உங்களுக்கு ஒத்து வருமா- வராதா? சொல்லுங்கள்!



கேட்டீர்களா புரபஸர்? சிறுக்கன் கொட்டம் பேசுகிறான்!
… மானத்தில் கொண்டு வந்திருக்கிறேன். அவசியப்பட்டால் பிறகு அவ்வப்போது சிறு மாற்றங்கள் செய்து கொள்வோம்!
வா வா பேச்சை முடித்துக் கொள்வோம் புரபஸர். சரி செய்ய வேண்டிய சங்கதிகள் நிறைய காத்துக் கொண்டு இருக்கின்றன!
வெள்ளோட்டத்தில் ஜெட் ஜமாய்த்து விட்டான்! யார் கண்டது? எதிர் காலத்தில் எல்லா உளவாளிகளும் ஜெட்டைப் போல் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!
நினைக்கும் போதே கசக்கிறது!



இலண்டன் ஸ்டாண்டர்ட்
ஸ்காட்லாண்டு யார்டுக்கு ஒரு ரோபோ-டிடெக்டிவ் அறிமுகம்!
ஸ்காட்லண்ட் யார்டின் தீவிர குற்றவியல் பிரிவான Y.Y. பிரிவில் இன்று தொடக்கம் பணியாற்றப் போகிறது ஜெட்-
ஏகப்பட்ட விளம்பரம் எனக்கு- எனக்கு வந்து சேர்ந்த முதல் கேஸ் ஹாட்டன் கார்டனில் நடந்த பயங்கர நகைக்கொள்ளை!
அதோ அங்கே போகிறது யார் தெரிகிறதா - ஸ்காட்லண்ட் யார்டின் மிஸ்டர் ஜெட்!





அமேதான் என்பது நெப்ட்யூன் கிரகத்திலிருந்து கொண்டு வரப்பட்
அபூர்வ ரக நவரத்தினக் கற்கள் என்று என மூளேயில் பதிவாகியுள்
தகவல் மையம் தெரிவித்தது. ஒவ்வொரு கல்லும் ஒரு மில்லியன்
மதிப்புள்ளது.
நீலநிற ஆஸ்டின் காரில்
ஏறி பறந்து விட்டார்கள்!


ஜேவெளவால்-கேட்டாவல்லவா? பறக்கும் படை உடனே துரத்திச் செல்லட்டும்!
உத்தரவு-மாஸ்டர்-இதோ-கிளம்பி விட்டது!


அதையடுத்து



ஹைய்யா- அவர்களைக் கண்டுபிடித்து விட்டேன்!
நீலநிற ஆஸ்டின் கிரேய் ரோடு வழியாக வடதிசையில் பறக்கிறது!
நெருங்கிச் சென்று ஆராய்ந்து தகவல் அனுப்புகிறேன்!



ராய்ய்-கொள்ளைக்
நம்பல்-சந்தேகமே
லில்லை! புகைப்படக்
நவியை இயக்கப்
பாகிறேன்.- இதோ!
YOB 1234





றக்கும் படை அனுப்பிய படங்களை
டனுக்குடன் பெற்று, பிரிண்ட்
பட்டுக் கொடுத்தது என் கட்டுமர
த்திலுள்ள கம்ப்யூட்டர்! அதே வினா
டியில் தகவல் மையம், நபர்களின்
பெயரை அந்தந்த புகைப்படத்தின்
து பொறித்தது-
மிஸ்டர்
ஜெட்டா?
கொக்கான்-
னனும்?



ஹெர்பர்ட்-லாசன்னி இருவரும் கொள்ளைக்காரர்கள்.
ஏகப்பட்ட திருட்டுக் குற்றங்கள் இவர்கள் மீது!
கூட்டாளிகள் இருவர்! ஜிம்-கொலைக்குற்றத்திற்காக நீண்ட காலத்தை ஜெயிலில் கழித்த கேடி-ராபேர தெக்ஸ்-கூலிக்கு ஒட்டிக்கொண்ட அடியன்!



அடுத்து என்ன-பாஸ்?
அவர்களை முடித்தவரை தேக்கி வை-இதோ-நான புறப்பட்டு விட்டேன்!
ஆல்ரைட்-தாக்குதலை தொடங்கப் போகிறேன்! ஜீ-பூம்-பா!


ஹே.. என்ன.. இது?


பட்! பட்! பட்!...
ஆஆ!


தாள் கிளப்பி
யாச்சு!
YOB 1234
டமார்!


எதிரிகளின் வாக-னத்தை அப்பளமாக்கி விட்டேன் பாஸ்! இதோ குண்டு போடப் போகிறேன்!
கெக்கெக்கே!
டமால்!
ராபோ தெக்ஸ் பணால்!


அடேய் பயலே! இதோ வந்து விட்டேன்!
இதோ இரண்டாவது தாக்குதலுக்கு திரும்பிச் செல்கிறேன்!


அதோ மீண்டும் வருகிறது-லாலர் கதிர்களை பாய்ச்சி அதை வீழ்த்து!
மரண அடி - ஊஹூம்- பிழைக்க மாட்டேன்!


எதிரிகளை துரத்திப் பிடிக்கும் முயற்சியில் என் பறக்கும் படை பலியாகிப் போனது!
ஆ
அடிவாங்கி விட்டேன் பாஸ்! ம-மற்ற பயல்களிடம் நான் விசாரித்ததாகச் சொல்லுங்கள்!
எல்லோருக்கும் பை! பை!
எல்லோரையும் கேட்டதாகச் சொல்லுங்கள்!
கிர்ஷ்!
ணங்..!



சிதறி ஓடுங்கள் - மீண்டும் சந்திப்போம்! எங்கே வந்து சேர வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமில்லையா?
சிதைந்து கிடந்த எதிரிகளின் வண்டி கண்ணில் பட்டதும், என் வேகத்தை இரு மடங்காக்கினேன்!
மசிக்குண்டை வீசி பறக்கும் படை குறியிட்டிருந்த அடையாளம் அதோ அவருடைய மண்டையில்!



நில்! சட்டத்தின் பெயரால் ஜெட் ஆணையிடுகிறேன்!
டிடெக்டிவ் ஜெட்!
பயலை விடாதே- கோழியைப் போல அமுக்கு ஜெட்!
ம்ம்- கிளப்பு! சீக்கிரம்- வழியில் எதற்கும் நிறுத்தக் கூடாது!




டவுண் பஸ்ஸில் ஏறித் தப்புவதை பார்த்து விட்டேன். பயல் வசமாக சிக்கி விட்டான்-
ஜம்ப்!!
அந்த பஸ்ஸை பிடிக்க வேண்டு மானால், இம்மாதிரி சர்க்கஸ் வேலைகளை தவிர்க்க முடியாது தான்!


ஹே-என்ன இது?


டிடெக்டிவ் ஜெட்-! நஷ்டஈடு தரப்படும்-கவலை வேண்டாம்!


டிடெக்டிவ் ஜெட்! நஷ்டஈடு தரப்படும்-கவலை வேண்டாம்!


எக்கச்சக்கமான செலவை டிபார்ட்மெண்டிற்கு உண்டு பண்ணிவிட்டது. இந்த முயற்சி- ஆனால், ஸ்பிரிங் கால்கள் இருக்கையில் அதை உரிய முறையில் பயன்படுத்தத் தவறலாமோ?
ஜிவ்!
குறுக்கு வழிதான் சௌகரியம்-


க்ரீரீக்!
ஹலோ-! ஹலோ-! ஹலோ!
டிடெக்டிவ் ஜெட்!


அட்டகாசமான நுழைவு? ஆனால் இந்த அரிய காட்சியை கண்டு களிக்கக் காத்திருக்காமல் தெக்ஸ் ஓட்டம்பிடித்துவிட்டான்
ஜெட்டிடமிருந்து அத்தனை சுலபத்தில் கழற்றிக்கொண்டு விட முடியாது-தம்பி!




பட்வா - ராஸ்கல்- தொலைத்தாய் இன்றோடு!
ணாங்!


ல-3.




ஒருத்தனை பிடித்தாயிற்று! மற்ற
மூவரும் தலைமறைவாகி விட்டார்கள்!
எங்கே என்று தேடுவது?
அந்த அபூர்வ நவரத்தினக் கற்களை இந்த
நகரத்தில் விற்றுப் பணமாக்க வேண்டு-
மானால் ஈவிங்கிடம்தான் வந்தாக
வேண்டும்! எனவே-



கொடுக்கவில்லை என்று சலித்துக் கொண்டாயல்லவா? உனக்கு ஒரு வாய்ப்பு- இந்த பிரம்மாண்டமான கட்டிடத்தினுள் போய் உள்ளே என்னதான் நடக்கிறது என்று பார்க்க வேண்டும் நீ!
பார்த்து விட்டால் போச்சு?
க்ளிக்!


ஈவிங்கின் மாளிகையில் ரோபோ நாய்கள் காவலிருப்பதாக தகவல்- ஜாக்கிரதையாக நடந்து கொள் பொடியா.
ம்ம்- கிளம்பு!


நேராக பால்கனியில் போய்
விழப் போகிறேன்!
டமால்!
ஓ-ஓ- ஜெட் சொன்னது சரி
தான். ரோபோ நாய்கள்!


க்ர்ர்ர்...
க்ர்ர்ர்...
ஹே- கால்களே! என்னை கைவிட்டு விடாதீர்கள்!




நான் இருப்பது-மழை-நீர் வடி-கால் குழாய் என்று தெரி-கிறது பாஸ்!
அந்த மூடியை அகற்ற முடியுமா?
யாருமே கண்ணில் படக் காட்ணுமே! வீடு முழுவ-தும் சுற்றி வந்து ஆராய வேண்டும்!



நான் பொறுமையாக காரில் உட்கார்ந்து கொண்டு இருந்தேன்- குள்ளனிடமிருந்து தகவல்களை எதிர்பார்த்தவாறு!
நூலக அறையினுள் நுழைகிறேன் மாஸ்டர்!
டெஸ்க் மீது ஏறி, அங்கே விவகாரமாக ஏதாவது கண்ணில் படுகிறதா என்று பார்க்கிறேன்!
டிர்ர்ரிங் டிர்ர்ரிங்


ஊய்ய்-! ஈவிங் வர்ருன்!


யாரது-மிஸ்டர் ஹெர்பர்ட்டா-ஆச்சரியமாக இருக்கிறதே!
ஓ யெஸ்! உங்களுடைய சமீபத்திய தேட்டைப்பொருளை வாங்குவதில் எனக்கு ஆர்வமிருக்கிறது!
நேரில் சந்தித்து பேசுவோமே? இன்று நள்ளிரவு லேனேயில் சாம்பிள் கொண்டு வந்து காட்டு - பேரம் பேசி வியாபாரத்தை முடிப்போம்!
போனில் பேசியவன் ஹெர்பர்ட்! ஈவிங் அவனை நள்ளிரவில் சாம்பிளோடு நேரில் வரச் சொல்லியிருக்கிறான் மாஸ்டர்!
அதிர்ஷ்டம் தான் போ!




நீ அங்கேயே கிடடா பயலே! கண்காணிப்பைத் தொடரு! நான் நள்ளிரவுக்கு வந்து சேருகிறேன்!
HARD
ஹைட் பார்க்கை ஒட்டி நான் காத்திருந்த போது மணி பன்னிரெண்டு. ஒரு ஜெட்-பைக் வேகமாக வந்து பிரேக்கிட்டு நின்றது!


து என்று என்னுடைய எக்ஸ்-ரே கண்கள் தெளிவாகக்
ண்டு கொண்டன!
நான் நினைத்திருந்தால் அப்போதே அவனை மடக்கியிருக்கலாம்!
ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. காரணத்தோடுதான்!
மிஸ்டர் ஈவிங் உங்களைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நேராக மேலே போகலாம்!



வேண்டும் என விரும்பினேன்.
எனவே ஹெர்பர்ட்டின் வழியில்
நான் குறுக்கிடவில்லை.
அவனுடைய தலை மறைந்த பிறகே நான் மறைவிடத்தை விட்டு வெளியே கிளம்பினேன்-
குள்ளன் உள்ளே வேவு பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிருன்-
ஹெர்பர்ட் உள்ளே வந்து சேர்ந்து இருக்கிருன் மாஸ்டர்- ஒரு துணி மூட்டையை வெளியே எடுக்கிருன்!


அமேதான் என்பதில் சந்தேகமேயில்லை!
இருக்கும் பட்சத்தில் உங்களி-டம் இது போன்ற கற்கள் மேலும் ஒன்பது இருக்க வேண்டுமே!
யெஸ்! அவற்றையும் நீ பெறலாம்- உரிய விலை கொடுத்து!
ருடு போன நவரத்தின ற்களில் இதுவும் ஒன்று- மாஸ்டர்- மேலே வாருங்கள்!
இதோ- வருகிறேன்!


இது பறவையா-
அல்லது விமானமா?
இல்லை. டிடெக்டிவ் ஜெட்!


ரோபோ-நாய்களுக்கு பொறுக்கவில்லை போலும்!
என்ன சப்தம்?
என் ரோபோ-நாய்கள் குரைக்கின்-றன- பால்கனியில் யாரேனும் வந்திருக்கக் கூடும்!




ஓ! நாம் பிறகு சந்திப்போம்!
கவலைப்படாதே!





என்னிடம் பத்திரமாக இருக்கும்!


இம்மாதிரியான குறுக்கீடுகளை என்றால் சகித்துக் கொள்ள முடிவதேயில்லை!
அறிவு கெட்ட நாய்கள்!


என்னை குறை கூறிப் பயனில்லை- என்னைப் படைத்தவர்களைத்தான் சொல்ல வேண்டும்.
இன்றிரவு தின்ன பிஸ்கட் கிடையாது உங்களுக்கு!



முரட்டுக் கண்ணாடி தடுப்புகள் எனக்கு ஒரு
தடையாக இருக்க முடியாது-
ஈவிங்- உன்னை
அரெஸ்ட் செய்கிறேன்!
டிம்-டிமால்!



நான்- ஸ்காட்லாண்ட்யார்
சேர்ந்த டிடெக்டிவ்



படர்வதை காண முடிந்தது-
நட- என்னோடு!
என்ன உளறுகிருய்? ரோபோ-டிடெக்டிவ்வா? என்னை கைது செய்ய காரணம்?



காரணம்!- திருட்டு நவரத்தினக் கல்லை நீ விழுங்குவதைக் கண்ணால் பார்த்தேன்!
டோ-ங்!
தாங்க்ஸ்டா குள்ளா- அசத்தி விட்டாய்!


எ-எ-என்ன இது-
ஹே-உதவி!
ம்ம்-கக்கித் தொலை- இல்லையேல், இப்படியே கட்டித் தொங்க விட்டுவிடுவேன்!


ஊப்ப்ப்!
பத்து வருஷம் ஐயாவுக்கு இங் ஜெயில் சாப்பாடுதான்!
ஈவிங்கின் கைகளை கட்ட நான் முனைந்தபோது வெளியே ஜெட்-ஸைக் ஒன்று கிளம்பும் ஓசை கேட்டது-தெளிவாக!
விர்ரூம்...


ஹெர்பர்ட் தன் பைக்கில் சைலன்ஸர் பொருத்த-வில்லை. பின்னர் இதற்கு ஒரு கேஸ் தனியாக பதிவு செய்ய வேண்டும். விடக் கூடாது!
ப்படியே ஜன்னல் வழியாக ளியே பாய்ந்தேன்-
அத்தரி பாச்சா!


ஹெர்பர்ட்- உன்னை கைது செய்கிறேன்!
சை- ரோபோ டிடெக்டிவ் சனியன்!
நடைபாதை பலவீனமாக இருந்ததா- இல்லை நான் தான் எடையைக்கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண் டுமோ தெரியவில்லை.
அதிர்ஷ்டவசமாக, ஹெர்பட்டும் வந்து என்னோடு சேர்ந்து கொண்டான்-
ஆ ஆ ஆ!



வாப்பா கண்ணு- உனக்கும் இடமிருக்கிறது இங்கே!



ஹாட்டன் கார்டன் நவரத்தினக் கற்கள் திருட்டு சம்பந்தமாக உன்னை கைது செய்கிறேன் ஹெர்பர்ட்-உன் சகோதரனும் இரு கூட்டாளிகளும் மற்ற ஒன்பது கற்களோடு எங்கே பதுங்கிக் கிடக்கிறார்கள் என்று மரியாதையாகச் சொல்லிவிடு!
என்னிடமிருந்து எதையுமேதெரிந்து கொள்ள முடியாது நீ! இரும்பு ஜடமே!


விடையைக் கண்டுபிடிக்க வேறு வழிகளும் உண்டு!
சட்டையை கழற்றி சோதனை போடப் போகிறேன்!


அவனுடைய பாக்கெட்டில் இருந்ததெல்லாம்- ஒரு உணவுப் பொட்டலம், சில்லறையாக மூன்றரை பவுண்டுகள், அவனுடைய பாட்டியின் ஃபோட்டா- அவ்வளவுதான்!
மேலும் ஆராய்ந்தேன்-


அவனுடைய காலணியில் ஒட்டிக் கொண்டிருக்கும் தூசியை 'மாதிரி' எடுத்து-
என் அனலைஸரினுள் போட்டேன்-


நொடியில் விடையை அச்சிட்டுக் கொடுத்தது-தெருவோரத்து நாய் செய்திருந்த அசிங்கம் காலணியின் தூசியுடன் கலந்திருப்பாக சேதி-
ஆங்! அத்தோடு அந்த நாய்க்கு வயிற்றுக் கோளாறு என்பதையும் சொல்ல மறந்து விட்டேன் பாருங்கள்!



மேல் தோலை கொஞ்சம் சுரண்டி எடுத்தேன்-
சோப்பை பயன்படுத்துகிறான் என்று விடை சொன்னது அனலைஸர்- ஊஹூம்- இந்த தகவல் யாருக்கு வேண்டும்?
குளிரில் உடல் வெட வெடக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம்தான் என்னை இங்கே நிறுத்தி வைக்கப் போகிறாய்?
நான் டிடெக்டிவ் ஜெட்- மூடு வாயை!



ஜுனா. கைவசம் இருக்கும் ஒரே தடயம்- உணவுப் பொட்டலம்தான்- அதை தயாரித்த ஹோட்டலின் பெயர்- ஸிங்க்கிங் ஸன் என்று அச்சிடப்பட்டு இருந்தது- மற்ற மூவரையும் அங்கே இப்போது சந்திக்க முடியுமோ?
TAKEA
PLICE RIST.
வெகு நேரமாகியும் ஹெர்பர்ட் வந்து சேரவில்லை என்றதும் அங்கிருந்து அவர்கள் ஓடிப் போய் விடக் கூடும். எனவே நான் முந்திக் கொள்ள வேண்டும்-


துறைமுகப் பகுதியில் இருந்தது அந்த சைனீஸ் ரெஸ்டாரெண்ட்-
SINKING SUN
HOT FOOD TO TAKEAWAY
99


ல-4.



உள்ளே கல்லாவில் உட்கார்ந்திருந்த ஆசாமியிடம் கேஸின் விபரங்களை மிகச் சுருக்கமாக எடுத்துரைத்தேன்-
ஒருத்தனை பிடித்துவிட்டேன்- மற்றவர்களை தேடி இங்கே வந்தேன்-


பெயர்கள்-லான்னி, லாண்டிஸ்- இவர்களை நீங்கள் பார்த்ததுண்டா?
இல்லை! எனக்கேன் வம்பு! போய்விடு- இங்கிருந்து!


வம்பு வேண்டாம் என்று நீ விரும்பினால் உனக்குத் தெரிந்த உண்மைகளை சொல்லி விடு. நான் டிடெக்டிவ் ஜெட்!
புரியவில்லை-நீ-நீ-போய் விடு!


வேறொரு யுக்தியை கையாள முற்பட்டேன். குரல்வளை சுவிட்சை மாற்றிப் போட்டேன்.


உரையாடலில் உபயோகமான தகவல்கள் கிடைத்தன. நான் தேடி வந்த நபர்களை அவர் பார்த்திருக்கிறார். உணவுப் பொட்டலங்களை வாங்கிக் கொண்டு போய் விட்டார்களாம். அவர்கள் நடந்து போன திசை அவருக்கு வியப்பூட்டியதாம்- ஏனெனில், அங்கே கிடங்குகளை தவிர வீடுகள் எதுவும் கிடையாதாம்!
கிடங்குகள்! அங்கே கண்ணில்பட்டவை அனைத்தும் கிடங்குகள்தான். எண்ணிக்கை பலநூறு இருக்கலாம் உதவி தேவை என்று தோன்றியது
அடேய் பசங்களா- வெளியே வாருங்கள்!
பறக்கும் படை இருந்தால் வேலை சுலபமாக முடிந்திருக்கும். ஆனால் அவன் தான் பழுது பார்க்கும் பட்டறையில் படுத்துக் கிடக்கிறானே!


ஓ கே பசங்களா! லாண்டிஸ ம், லான்னியும் இந்தப் பகுதியில்தான் எங்கோ இருக்கிறார்கள். போய் தேடுங்கள். ரேடியோ-தொடர்பு தொடர்ந்து இருக்கட்டும். ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்!


யெஸ்-
மாஸ்டர்!
எப்படியாவது தேடிக் கண்டு பிடித்து விடுவோம்!
அந்தத் திருட்டுப் பசங்களுக்கு கேடு காலம் தொடங்கி விட்டது!



பொருத்தப்பட்டிருந்-
தால் கிடங்குகளை வேகமாக ஆராய
முடிந்தது. ஆனால் நேரம்தான் கடந்து
கொண்டிருந்ததே தவிர
பலனேதும் கிட்டவில்லை.
கால்கள் வலி கண்டுவிட்ட-
தால் ஒரு மாறுதலுக்காக -
சொய்ங்
பிரிங் பொருத்தப்பட்ட
த்தை நீட்டி ஆராய்ச்
யை தொடர்ந்தேன்-
இதுவும் காலி!


DANTY'S
சிலந்தியிடமிருந்து மாஸ்டருக்கு- அவர்களை கண்டு பிடித்து விட்-டேன் என்று நினைக்கிறேன!
நான் இப்போது டான்டிஸ் கேரியர்ஸ் கிடங்கில் இருக்கிறேன்!



ளைபக் கூடையில் 'ஸிங்க்கிங்
ஸன்'னில் வாங்கிய உணவுப்
பொட்டலத்தின் மேலுறை
கிடக்கிறது!
பேஷ்- பேஷ்- புத்திசாலித்-
தனமான கண்டுபிடிப்பு!
SINKING SUN
த்த இடத்தை எக்ஸ்-ரே அமைப்பின் மூலம் ஆராய்ந்தேன். ஏகப்-
பட்ட சாமான்கள் ஒன்றுபின்றுவென்று குவிந்து கிடந்ததால்
மையப்பகுதியிலிருப்பவை எதுவும் தெரியவில்லை. உள்ளே
தான் தெரிந்து கொள்ள வேண்டும்.


பூட்டை ஓசைப்படாமல் திறந்தேன்.
க்ளிக்!


ர் கதிர்களையும்
ரயோகிக்க
ண்டியிருந்தது!
எஃகு கதவாக இருந்தாலும்
லாசர் கதிர்களுக்கு முன்
எம்மாத்திரம்?
NO ENTRY




டார்ச் விளக்கின் வெளிச்சத்தில்
சீட்டாடிக் கொண்டு


ஜாலியாக என்று நான் குறிப்பிட்டது தவறோ?
ஹெர்பர்ட் இன்னமும் திரும்பி வரக் காணோமே- ஏதேனும் வம்பில் மாட்டிக் கொண்டு விட்டானோ- என்ன?
ஊம்- அலட்டிக் கொள்ளாதே- ஹெர்பர்ட் லேசுப்பட்டவனில்லை! எதையும் சமாளித்து விடுவான்!



தவறான கணிப்பு! டிடெக்டிவ் ஜெட்டை சமாளிக்க முடியாது போனதால் இப்போது கம்பிகளின் பின்னால் இருக்கிறான்!
பரவாயில்லையே- என்னை தெரிந்து வைத்திருக்கிறாயே!
ஆங்!
டிடெக்டிவ் ரோபோ ஜெட்!





துப்பாக்கியில் கை வைத்தனர். முந்திக் கொண்டு நான் வலது கை விரல்களை நீட்டி அவர்களை குறி வைத்தேன்-





ஆனாலும் லான்னியின் செயல் வேகம் அபாரமானது என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.


அது மட்டுமல்ல- சரியாக குறி வைப்பதிலும் படு சமர்த்தனாக இருந்தான்-
க்ராஷ்!
அவனுடைய துப்பாக்கியிலிருந்து பீச்சிய கதிரலைகளின் தாக்குதலால் நிலைகுலைந்து பின்னுக்கு சரிந்தேன்- பெட்டிகள் மீது!



இந்த லான்னியிடம் வாலாட்டத் துணிந்த எவனும் இதுவரை வெற்றி கண்டதில்லை ரோபோ டிடெக்டிவ்வாக இருந்தாலும் விதிவிலக்கல்ல புரிந்து கொள் ஜெட்!


க்ளிக்!
தப்பக் கணக்கு போடுகிருயடா மமதை பிடித்த- வனே!



குண்டுகளுக்கு தலில் பதில் சொல்!


ஆ ஆ!
மறுவினாடி அந்த கிடங்கு பற்றி எரியத் தொடங்கியது.
திருட்டு நாய்களை அங்கேயே வேச
போட்டிருக்க வேண்டும் நான்!
மனசு கேட்கவில்லை!


பரவி அகப்பட்டதையெல்லாம் கபளீகரம் பண்ணிக் கொண்டிருந்தது-
லான்னியின் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது கிடங்குக்கு தீ வைத்த அடாத செயலையும் சேர்த்துக்கொள்ள நான் மறந்துவிடக்கூடாது-
மறுநாள் எல்லா பத்திரிக்கைகளும் என்னைப் பற்றி நிறைய எழுதியிருந்தன-
டெய்லி எக்ஸெஸ்
ரோபோ டிடெக்டிவ் ஜெட்டின் சாதனை! பிரபல நகைத் திருட்டு கும்பலை கைது செய்த சாகஸம்!
மில்லியன் பவுண்டுகள் பெறுமானமுள்ள நெப்ட்யூன்-அமேதான் ரத்தினக் கற்கள் இலண்டன் மாநகரின் முதல் ரோபோ-டிடெக்டிவின் அற்புத சாதனையால் கொள்ளைக் கும்பலிடமிருந்து பத்திரமாக மீட்கப் பட்டு விட்டன-



பாராட்டுவதற்கு பதிலாக எரிந்து விழுந்தார-
சே- இப்படி பண்ணி வந்து நிற்கிருயே- அதுவும் முதல் கேஸில்!
எட்டுக் கார்களை நொறுக்கியிருக்கிரு ஒரு பஸ்ஸின் மேற்கூரையை பிளந்த் தள்ளியிருக்கிருய். பத்து சதுர கஜ பொது நடைபாதையை நாசம் செய்த் ருக்கிருய். இதுமட்டுமா- ஒரு கிடங் மொத்தமும் தீக்கிரையாக காரணமா இருந்திருக்கிருய். அந்த கட்டிடத்தி உள்ளே இருந்த சாமான்களின் மதி என்ன தெரியுமா உனக்கு- எட்டு மில்லியன் பவுண்டுகள்!
'லபோ லபோ'வென்று ஏன் அடித்துக் கொள்கிறீர்கள்? மொத்தம் எட்டு மில்லியன் பவுண்ட்- நான் மீட்ட பொருட்கள் பத்து மில்லியன் பவுண்ட்! லாபம்தானே?


பேசுவதாக நினைப்போ!
உன்னை என் தலையில் கட்டினார்களே
ஆனால் ஒன்று மட்டும் உறுதி- இனியும்
இங்கே வைத்து சமாளிக்க முடியாது!
போ-போய் விடு!
அப்பொழுது உயர்
அங்கே வந்து சேர்ந்தார்


வந்து-லார்-உளவுத் துறை அவனால் எட்டு மில்லியன் பவுண்டுகள் நஷ்டஈடு கொடுக்க வேண்டியுள்ளது-இத்தனைக்கும் அவன் மேற்கொண்டது ஒரே ஒரு கேஸ்!
ஜெட், இலண்டனின் முதல் ரோம்போ டிடெக்டிவ்! சோதனை
தொடரவேண்டியது அவசியம்.
டிவ்களுமே ரோபோக்களாக இருக்கப் போகும் நாள்
தொலைவில் இல்லை!
அவன் தொடர்ந்து பணியில் ஈடுபடப் போகிறான் புரிகிறதா!
யெஸ் ஸார்




ாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை ளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626 123.
எண்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி.
வெளியீடு எண்: 51



லயன்
காமிக்ஸின்
நான்காம்
பிறந்த நாளைக்
கொண்டாடும் வகையில்
ஜூலை 1-ல்
வருகிறது
ஆண்டு
மலர்!


அடுத்த வெளியீடு!
லயன் ஆண்டு மலர்!
லயன் காமிக்ஸ்
கானகத்தில் கண்ணாமூச்சி!
லேடி ஜேம்ஸ்பாண்ட்
மாடஸ்டி பிளைஸியின் சாகஸத்துடன்!

பிளஸ்

# மரணப் பாலம்!

முழு நீள சஸ்பென்ஸ் கதை!





## வாசகர் கடிதம்!



● **க. வெங்கடேஸ்வரன், க. கவிதா, அருப்புக்கோட்டை.**

கோடை மலரின் பொலிவு வர வர ஏறிக் கொண்டே போகிறது. இரட்டை வேட்டையர் உங்களுக்கு என்ன பாவம் செய்தனர்? அவர்களின் கதையை லயன் சூப்பர் ஸ்பெஷலிலும், 50'வது இதழிலும் போடவில்லை. கோடை மலரை பெரிய புத்தகமாக வெளியிட்டுள்ளீர்கள்!

● **பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.**

சூதாடி நில்ஸன் 'டெபுடி ஷெரீப்' ஆக மாறுவது மனதை தொடும் நிகழ்ச்சி. கதையினூடே உரையாடல்களில்தான் எத்தனை நகைச்சுவை... நேராய் டெக்ஸாஸில் ஒரு 'திகில் ரவுண்ட்' அடித்ததைப் போல் இருந்தது. லயனுக்கு'டிராகன் நகரம்'மற்றுமொரு 'மைல் கல்.'

● **S. இலட்சுமணன், மூலக்கடை, சென்னை-51.**

டிராகன் நகரம் உண்மையிலேயே மிகவும் டாப்பான கதை. டெக்ஸ் வில்லரின் மகன் கூட தூள் கிளப்புகிறார். ஸ்பைடரின் கதை சிறியதாக இருந்தாலும் அற்புதமாக இருந்தது. இந்த 50-வது இதழில் ஆர்ச்சியை காண முடியவில்லை என்ற சிறிய மன வருத்தத்தை வேட்டை வீரர் ஜிம் தீர்த்து விட்டார்.

● **R. யுவகுமார், அரும்பாக்கம், சென்னை.**

50-வது இதழான டிராகன் நகரம் படித்தேன். விறுவிறுப்பாகவும், அட்டகாசமாகவும் இருந்தது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த கதையைப் படித்து முடித்தவுடன் ஒரு திருப்தி. மற்றக் கதைகளும் அட்டகாசம். இல்லை, இல்லை... அமர்களம். இல்லை, இல்லை .. ஓ! இந்த இதழை பாராட்ட வார்த்தைகளே இல்லை.

● **K. கண்ணன்குமார், கொடுமுடி.**

டெக்ஸ் வில்லரின் கதைகளில் இது ஒரு 'எவரெஸ்ட் போன்றது' அட்டைப் படம் மிகவும் அழகாயிருந்தது. மற்றும் ஸ்பைடர், நோலன், ஜிம்பா ஆகியோரது கதைகளும் அருமை. அடுத்த இதழில் வரும் மிஸ்டர் ஜெட்டை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். லயன் 50'வது இதழ் வெற்றியோடு 4-வது பிறந்த நாளும் நமது லயனுக்கு ஜூலை மாதம் வருகிறது என்பதை கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

● **A சிவராமன், A. செல்வராஜ், உளுந்தூர்ப்பேட்டை.**

லயன் காமிக்ஸில் புத்திசாலி வீரர் யார் என்று கேட்டால் நாங்கள் 'ஜிம்பா' என்றுதான் சொல்வோம். அடிக்கடி அவர் கதையை சிறு கதையாக போடவும்.

● **S. சுரேஷ் ஜான், S. ரமேஷ் குமார், உளுந்தூர்ப்பேட்டை.**

டிராகன் நகரம் செம த்ரில்லிங் STORY. தென்றலைப் போன்ற விவேகம், சூறாவளியைப் போன்ற செயல் வேகம் இவற்றின் மொத்த உருவம் டெக்ஸ் என்றால் மிகையாகாது. டெக்ஸ்-க்கு இதில் கனத்த வேலை தான், இல்லையெனில், லயன் 50-வது இதழ் அவ்வளவு கன-மாக இருக்க முடியுமா?

● **P. பெரியசாமி, சேலம்-3**

''டிராகன் நகரம்'' படக் கதையில் டெக்ஸ் வில்லர் தூள் கிளப்பி விட்டார், நான் மட்டும் டெக்ஸ் வில்லராக இருந்தால் ..........


# அப்பல்லோ படலம்!

க்ரைம் படக் கதை!



இம்மாத
திகில்
காமிக்ஸில்!



விச்சு கிச்சு
என்னப்பா கோல் கீப்பர் இவன்? இதோடு பத்து கோல் விட்டுவிட்டான். இவன் எந்த அணிக்காக ஆடுகிறான் என்பதே சந்தேகமாகயிருக்கிறது!
நல்லவேளைக்கு ரெபரி விசிலை ஊதி ஆட்டத்தை முடித்து விட்டார்! இல்லாவிட்டால் ஸ்கோர் 60-0 என்று இருந்திருக்கும்! கோல் கீப்பரா அவன்?
போகிறான் விடு கிச்சு! ஸ்ட்ராங்காக ஒரு கப் டீ குடிப்போம், வா!
அந்த அரைவேக்காட்டு கோலியை நினைத்தாலே பற்றிக் கொண்டு வருகிறது விச்சு! சரியான கோமாளி!
இன்னும் அவனைப் பற்றியே நினைப்பானேன்? டீயைக் குடி!
சே! டீ குடிக்கக்கூட முடியலே! பஸ்ஸைப் பிடித்து வீட்டுக்குப் போகலாம்!
அச்சச்சோ! இந்த சின்ன விஷயத்திற்கு இப்படி அலட்டிக் கொள்கிறாயே!


அதோ பஸ் வருகிறது கிச்சு!
அந்த ரேஞ்சால் அணி கோலி மட்டும் இப்போது என முன்னால் வந்தால் நாலு சாத்து சாத்தி விடுவேன்!
நா - நான் இறங்க வேண்டிய ஸ்டாப் வந்து விட்டது கிச்சு! டாடா!
பின்னர்-
என்ன கிச்சு? ரொம்ப நேரமாகி விட்டதே! நிறைய அறிவுரை சொன்னாயோ?
சே! பஸ்ஸை விட்டு தூக்கி எறிந்து விட்டான் தடியன்!

# ஹாட்-லைன்!



## வெல்கம் டு ஹாட்லைன்!

லயன் '50 வது இதழான ''டிராகன் நகரம்'' ஒரு ''கனத்த'' சர்ச்சையையே உருவாக்கி விட்டது! ஆமாம்- ''இந்த விலைக்கு இத்தனை பக்கங்கள் எப்படி வெளியிட முடிந்தது?'' என்று கேட்காதவர்களே கிடையாது! அது போக, டெக்ஸ் வில்லரின் அட்டகாசமான முழு நீ நீ நீளக் கதையும் நிறைய பாராட்டைப் பெற்றுள்ளது!

பாராட்டுத் தெரிவித்து எழுதிய அனைவருக்கும் ஒரு பெரிய தாங்க்ஸ்!

இனி இந்த மாதத்துக் கதைக்கு வருவோம்! தமிழ் காமிக்ஸ் உலகைப் பொருத்தவரை ''மிஸ்டர் ஜெட்'' ந படு வித்தியாசமான முயற்சி!

கொஞ்சம் கொஞ்சமாய் மனிதனை சோம்பேறியாக்கி வரும் இயந்திரங்கள் எதிர்காலத்தில் சி. ஐ. டி. வேலையையும் பார்க்க நேரிட்டால் விளைவு என்னவாகயிருக்கும் ?பதை ''மிஸ்டர் ஜெட்'' காட்டுகிறது! இந்தக் கதையை நான் மிகவும் ரசித்தேன்! உங்களுக்கும் பிடித்திருக்கிறதா என்பதை தரியப் படுத்துங்களேன்!

அடுத்த மாதம் லயனின் நான்காவது பிறந் ள் மலர் வருகிறது! ''கானகத்தில் கண்ணாமூச்சி'' கதை நெடு நாளைக்குப் பிறகு மாடஸ்டி & கார்வின் உங்களை சந போகிறார்கள்! தவறாமல் வந்து விடுங்கள்!

அன்புடன்,

எஸ். விஜயன்


மிஸ்டர் ஜெட்!
லயன் காமிக்ஸ்
ரூ. 2-50